**செய்தி வெளியீடு எண் : 1333** **நாள் : 05.08.2022**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாட்டில் உள்ள என்.எல்.சி. திட்டங்களுக்கு நிலம் வழங்கிய குடும்பங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிப் பட்டதாரி பொறியாளர் தேர்வில் முன்னுரிமை வழங்குவதை உறுதி செய்திடக்கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்**

தமிழ்நாட்டில் உள்ள இந்திய அரசின் நவரத்னா பொதுத்துறை நிறுவனமான என்.எல்.சி திட்டங்கள் மற்றும் சுரங்கங்களுக்கு நிலம் வழங்கிய குடும்பங்களைச் சேர்ந்த உள்ளூர் விண்ணப்பதாரர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் சிறப்புத் தேர்வின் மூலம் நியமிக்கப்பட வேண்டும் எனவும், கேட் (GATE) தேர்வு மதிப்பெண் அடிப்படையில் பயிற்சிப் பட்டதாரி பொறியாளர்களை நியமிக்கக்கூடாது எனவும் உத்தரவிட வேண்டும் என்று 2022 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதி, தான் ஏற்கெனவே எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டதை வலியுறுத்தி, தமிழ்நாட்டைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிப் பட்டதாரி பொறியாளர் பணிக்குத் தேர்வு செய்வதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையில் அழுத்தமான நியாயம் இருப்பதால், இந்த விஷயத்தில் மாண்புமிகு பிரதமர் தலையிட்டு விரைவில் சாதகமானதாக முடிவு எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

*****

**Text of D.O.Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru.M.K.Stalin to Hon'ble Prime Minister of India Thiru.Narendra Modi requesting to ensure a significant proportion of the managerial cadre is also drawn from the same geographical area in the recruitment of Graduate Engineering Trainees.**

You would recall that I had written to you on 5th May, 2022 requesting you that NLC Ltd, a Navratna PSU of Government of India who's main operations are located in Tamil Nadu should be directed to undertake recruitment of Graduate Engineer Trainees through a special examination giving due weight to local candidates from among families who have provided land for NLC projects and mines, instead of on the basis or scores in the GATE examination.

Despite this request, it appears that NLC has gone ahead with recruitment based on GATE scores and 300 candidates have been shortlisted. It is apprehended that the number of local candidates would be a very small proportion of those shortlisted. This is considered not fair and just and this is also likely to cause considerable disquiet in the local area, particularly in a context where NLC has stopped offering permanent jobs to persons from Project Affected Families.

In this context I would once again urge you to undertake GET recruitment in NLC only on the basis of a special recruitment examination and with due priority being accorded to persons from Project Affected Families. Given that NLC's operations are primarily based in Tamil Nadu and most of the workers and stakeholders are also based in the State. It would be appropriate if a significant proportion of the managerial cadre is also drawn from the same geographical area.

Hence, as there is a strong case to give priority to candidates from Tamil Nadu in GET recruitment, I am sure that this is considered favourably at the earliest with your kind intervention in this regard.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in